# இந்திய இலங்கை இடையிலான கடற்தொழில் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பான கூட்டு குழு சந்திப்பின் கூட்டு பத்திரிகை அறிக்கை

**ஆகஸ்ட் 29, 2014**

இந்திய இலங்கை கடற்தொழில் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பான கூட்டு குழுவின் முதல் சந்திப்பு 29 ஆகஸ்ட் 2014 அன்று புது தில்லியில் நடைபெற்றது. இந்திய தூதுக்குழுவை டாக்டர் ராஜா சேகர் வுந்த்ரு, இணை செயலாளர் (கடற்தொழில்), கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை துறை அவர்களும், இலங்கை பிரதிநிதிகள் குழுவை திரு.நிமல் ஹெட்டியாராச்சி, பணிப்பாளர் நாயகம், சுகாதர துறை அவர்களும் தலைமை தாங்கினார்.

கடற்தொழில் தொடர்பாக இருதரப்பு ஒத்துழைப்புக்கான கூறுகளை இந்த கூட்டு குழு உள்வாங்கி உள்ளது. ஆராய்ச்சி, வளர்ச்சி மற்றும் திறன் வளர்த்தல் தொடர்பாக அந்தந்த அறிவியல் நிறுவனங்கள் இடையே கூட்டு வாய்ப்புகளை ஆராய இரண்டு பக்கங்களும் ஒப்புக் கொண்டனர்.தற்போது ஒருவருக்கொருவர் காவலில் எந்த நேர்மையான மீனவர்களும் இல்லை என்பதை இந்த கூட்டு குழு குறிப்பிட்டது. மீன் வள கூட்டு இயங்குமுறைகளுக்கான வாய்ப்புகள் குறித்து இரு தரப்பினரும் விவாதித்தனர்.

கடற்தொழில் பிரச்சினைகள் தொடர்பான கூட்டு குழு அமைப்பின் அளவு எல்லைக்குட்பட்டு இருதரப்பு பேச்சுவார்த்தையின் வேகத்தை பராமரிப்பதை இந்த சந்திப்பு ஏற்றுக்கொண்டதில், இருபுறமும் ஒரு பொருத்தமான தேதியில் கொழும்பில் கூட்டு குழு சந்திப்பின் அடுத்த சுற்றை ஏற்பாடு செய்யவும், பரஸ்பர கலந்து ஆலோசனைகள் செய்து அந்த தேதி நிச்சயிக்கப்படும் எனவும் முடிவு செய்யப்பட்டது.